ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2403/74 - 2024 සැප්තැම්බර් මස 28 වැනි සෙනසුරාදා - 2024.09.28

2403/74 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: KES/DS/LND/ACI/SAMURDI BANK.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/2/2017/S/525.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக் கொள்ளலின் நோக்கம்: மடபாத்த சமுர்த்தி சமூக அடிப்படை வங்கியை அமைப்பதற்குத் தேவையான காணி எடுத்தல்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கெஸ்பேவை பிரதேச செயலாளர் பிரிவில் பட்டகெத்தர வடக்கு கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரல் வரைபட இல. 521208 (தொகுதி இல. 04, தாள் இல. 05) இல் துண்டு இல. 1 எனக் காட்டப்பட்ட 0.0269 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழே விபரிக்கப்படும் காணித் துண்டின் விபரங்கள் பின்வருமாறு:

**01. துண்டு இல. 1**

காணியின் பெயர்: த மெல்வத்த, மடபாத்த வீதியில் வரி மதிப்பீட்டு இலக்கம் தெரியாத காணி; விபரம்: வீட்டுத் தோட்டம், இரண்டு நிலையான கட்டிடங்கள் காணப்படுகின்றன; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: காணிச் சீர்திருத்த ஆணைக்குழு; விஸ்தீரணம்: 0.0269 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2024 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 04 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு கெஸ்பேவை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்


*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2024 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கே. பீ. பேமதாச,
பிரதேச செயலாளர்/
காணி எடுத்தல் உத்தியோகத்தர்,
கெஸ்பேவை.

பிரதேச செயலகம்,
கெஸ்பேவை,
2024, செத்தெம்பர் 24.

EOG 09 - 0210

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: කැප්‍රාලේ/අත්3/1/58.
காணி அமைச்சின் குறிப்பு இல.: L-D/05/2007/HA/230.

காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் 2018.04.02 ஆந் திகதிய 2065/4 ஆம் இலக்க மற்றும் 2023.10.20 ஆந் திகதிய 2354/27 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் என்னால் பிரசுரிக்கப்பட்ட 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல் பின்வருமாறு திருத்தப்படுகின்றது என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

கெஸ்பேவை பிரதேச செயலாளர் உத்தியோகபூர்வ இல்லத்தை அமைப்பதற்குத் தேவையான காணி எடுத்துக் கொள்ளல்

மேல் மாகாணம்,கொழும்பு மாவட்டம், கெஸ்பேவை பிரதேச செயலாளர் பிரிவில் இல. 576, தும்போவில மேற்கு கிராம அலுவலர் பிரிவில், தும்போவில கிராமத்தில் அமைந்துள்ள கடத்திரல் வரைபட இல. 521203 எனத் திருத்தப்படுதல் வேண்டும்.

கே. பீ. பேமதாச,
பிரதேச செயலாளர்/
காணி எடுத்தல் உத்தியோகத்தர்,
கெஸ்பேவை.

பிரதேச செயலகம்,
கெஸ்பேவை,
2024, செத்தெம்பர் 24.

EOG 09 - 0211

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.